ம.பிரசுரம்

# சுயராஜ்யம் யாருக்கு?

## இரண்டாம் பாகம்

காங்கிரஸ் திட்டம்,
காங்கிரஸ் உபாயங்கள்,
கதரும் குடியாமையும்,
தீண்டாமை,
ரஷ்யர் திட்டம், மிதவாதம்,
ஜஸ்டிஸ், சுயமரியாதை,
இந்து மகமதிய பிரச்சினை,
காந்தியாரின் தந்திரமும்,
ஜனநாயக ஆட்சி,
சுயராஜ்யம் தனக்குத் தருகை.

ஆசிரியர்
M. சிங்காரவேலு, பி.எ., பி.எல்.,

சென்னை திருவல்லிக்கேணி பேட்டை,
ஞானபண்டிதர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது

1933

காபி ரைட்] [விலை அணா 1.

18 APR 1934
MADRAS

Radisson GRT Luxury Hotel. Chennai - 16. Ph: 2310101
Visit us at: www.grtjewels.com

222259

# சுயராஜ்யம் யாருக்கு?

## (Swaraj to whom?)

12 APR 1934
MADRAS

### இரண்டாம் பாகம்.

---

## காங்கிரஸ் சுயராஜ்யம்.

மாந்தரை வருத்தும் பசி, பிணி, மூப்பு, சாக்காட்டை பிரிட்டிஷ் ராஜ்யத்தில் திருப்திகரமாக குறையாத விஷயத்தையும், பாமர மக்களுக்கு கல்வி கேள்விகளை எட்டவைக்காத விஷயத்தையும், இதன் முதல் பாகத்தில் குறிப்பாக காட்டினோம். இனி சுயராஜ்யமென்ற தேசீய சுய ஆட்சிகளில் நமது மக்களின் குறைகளைத் தீர்க்க காங்கிரஸ் பாத்திரமாகுமாவென விசாரிப்போம்.

நமது நாட்டின் தற்கால நிலைமையை சுருக்கி உரைப்பின், முதலில் 30 கோடி மனிதருக்கு உண்ணத் தகுதியான உணவு கிடைக்கவில்லை. பால், தயிர், நெய், மோர் கிடைக்க பாக்கியம் பெறாத மக்கள் கோடி கணக்காகப் பார்க்கலாம். பெரும்பான்மையோருக்கு, வீடோ, நிலமோ, சொந்தமில்லை. வாய்க்கரிசிக்குக் கூட வழியில்லாதவர், 4 கோடிக்கு மேல் இருந்து வருகிறார்கள். 30 கோடி ஜனங்களுக்கு சரியான ஞான மூண்டாக்கத்தக்க படிப்பு கிடையா. பெண்க

ளின் நிலைமை மிகவும் தாழ்ந்திருக்கவும் காணலாம். இவர்கள் பெறும் பிள்ளைகளுக்கு பொது ஆகாரவு மொன்றுமில்லை. நாடும் நகரமும், வீடு வாசலும், அசுத்தத்திலும் நாற்றத்திலும் மூழ்கிக் கிடக்கின்றன. 3 கோடி தொழிலாளர் வேலை நிச்சய மின்றி, அடிமைகளைப்போலவே நடத்தப்பட்டு வருகின்றார்கள். தொழிலாளி செய்யும் வேலையில் அவர்களுடைய அபிப்பிராயத்தை எடுப்பதே இல்லை. கணக்கு வழக்கில்லாமல், கோவில்களில், மடங்களில், மாதாகோவில்களில், உற்சவங்களையும், அர்ச்சனைகளையும், பூஜை நெய்வேத்தியமும், செய்யப்பட்டு, அதனால் ஏழைத் தொழிலாளரும், கிருஷிகரும், தங்கள் அல்ப வரும்படியினின்று செலவிட்டு, இன்னும் ஏழைகளாகின்றனர். மூடபக்தி மூலமாக புரோகிதரும் அர்ச்சகருமே ஏழைகளின் வருமானத்தைக் கைக் கொள்ளுகின்றார்கள். நாட்டு வைத்தியன், அகீம், ஆயுர்வேதியர், யூனானி வைத்தியர், மயிலெண்ணை குயிலெண்ணை வைத்தியர், ரண வைத்தியர், அம்பட்ட மருத்துவச்சிகள் முதலிய மெஞ்ஞானமடையாத பித்தலாட்டக்காரர்களும், வைத்தியம் ஒன்றும் தெரியாதவரும், பாமர ஜனங்களை ஏமாற்றி, மரண விகிதத்தை அதிகரிக்கின்றனர். விவசாயத் தொழிலாளர்களுக்கு பயிர் செய்யும் இடங்களில் யாதொரு பாத்தியதையும் அக்கும் ஆதிக்கமும் கிடையாது. யாருக்கும் வேலை நிச்சய மென்பதே கிடையாது. இவர்கள் வசித்துவரும் இடங்கள் சுகாதாரமென்பதை அறியா. அண்ணாடம் வருமானம் ஒரு அணா மூன்று தம்படியாம்! இத்துக்ககரமான வாழ்வை எவ்விதமாக சுயராஜ்ஜியத்தில் தீர்க்கப் போகின்றார்கள் என்பதைப் பார்ப்போம்



## காங்கிரஸ் திட்டம்.
## (Congress System)

தற்போது நடக்கும் பிரிட்டிஷ் ஆட்சி முறையே சுயராஜ்யத்திற்கு அடிப்படையாகும். அதே மந்திரிகள், அதே ஞாயங்கள், அதே கோர்ட்டுகள், அதே சட்டசபைகள், அதே அங்கத்தினர்கள், அதே தேர்தல்கள், அதே சேனைகள் சிப்பந்திகள், சேவகர்கள், கவர்னர்கள், மாஜிஸ்டிரேட்டுகள், அதே தனிவுடமை, அதே ஜீவனம். ஆனால், இந்த வேலைகளைப் பார்ப்போர், தற்போதுள்ள ஆங்கிலேயர்களுக்குப் பதிலாக, இந்தியர்களாய் இருப்பார்கள். இந்த வித்தியாச மொன்றைத் தவிர மற்ற விஷயங்களில் பெரும்பான்மையும் அதே விதமே. சுதேச ராஜ்ஜியத்தை நடத்தப் போகின்றவர்கள் யார்? அந்த பி.ஏ., பி. எல்களே! அந்த லாயர்களே! அந்த பணக்காரர்களே! அந்த பாங்கர்களே! அந்த ஆலை முதலாளிகளே! அந்த கப்பல் சொந்தக்காரர்களே! அந்த ரயில் அதிகாரிகளே! அந்த சேனைத் தலைவர்களே! அந்த ஜமீன்தார்களே! அந்த மிராசுதார்களே! அந்த சுரோத்தியக்காரர்களே! அந்த மதாபிமானிகளே! அந்த ஜாதி வரம்பில் இருப்பவர்களே! அந்த மகாத்மாக்களே! அந்த மௌலானாக்களே! அந்த ஸ்வாமிகளே! அந்த மடாதிபதிகளே! அந்த ஆர்ச்பிஷப்ஸ்களே! அந்த மாளவியாக்களே! அந்த மகம்மதலி சவுகத் தலிகளே! அந்த அம்பேத்கர்களும், கெல்கர்களும், மூன்சேக்களும், ஸர் சப்ருக்களும், ஷாபிகளும் ஐயர், ஐயங்கார், முதலி, செட்டி, நாயுடு, பிள்ளைகளுமே!!! இவர்கள் நமது கோடானகோடி பாமர மக்களுக்கு தங்கள் சுயராஜ்யத்தில் என்ன செய்யப் போகின்றார்கள்? தங்கள் வீடு, பங்களா, மாட மாளிகைகளை பாமரமக்கள் தங்கும்படி

விடப்போகின்றார்களா? தங்கள் நிலம் நீர்களை, பாமர மக்களுடன் சமத்துவமாக, விளையச் செய்யப் போகின்றார்களா? சாதாரணமாக தாங்கள் சாப்பிடும் உணவைப்போல் பலகோடி பாமர மக்களும், அவர்கள் குழந்தைகளும், உண்ணவும் உடுக்கவும் விடப்போகின்றார்களா? பறச்சேரி, பள்ளச்சேரி, பட்டினச்சேரி, உப்பரவச்சேரி, ஒட்டச்சேரி, முதலிய கிராமாந்திரங்களை, அக்ரகாரங்களைப்போல் கட்டப் போகின்றார்களா? கோடான கோடி ஏழைகள் பாய் தலையணை இல்லாத ஏழைகள், பாயிலும், கட்டிலிலும் படுத்துறங்க வசதிகள் உண்டாக்கப் போகின்றார்களா? தொழில் செய்யும் இடங்களில், தொழிலாளிக்கு பாத்தியதையை உண்டாக்கப் போகின்றார்களா? அவனுக்கு தொழில் நிச்சயத்தை அங்கீகரிக்கப் போகின்றார்களா? தெருக்களில் திரிந்துவரும் கோடான கோடி குழந்தைகளுக்கு உயர்தரக் கல்வி, மெஞ்ஞானக்கல்வி அடைய வேண்டிய சலுக்கைகளை உண்டாக்கப் போகின்றார்களா? சுருங்க உரைக்கில், இந்தியப்பொருள் அனைத்தும், விளைபொருள், செய்பொருள் யாவும் சமமாகவும், பொதுவாகவும் இந்தியா முப்பத்து முக்கோடி மக்கள் அநுபவித்து, மத வைராக்கியமின்றி ஜாதி ஆணவமின்றி உண்மையான தோழர்களாக வாழ விடப்போகின்றார்களா?

---

## காங்கிரஸ் அரசியல் திட்டம்.
## (Congress Government)

இது புராதன முதலாளி திட்டமே. இந்த திட்டம், சகல தேசங்களிலும் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் பெயர் ஜன நாயக பிரதி நிதித்துவமெனப் பெயர் (**Democracy**). வாஸ்தவத்தில், இது ஜன நாயகமே ஆகா. ஆதிக்க முடை



யோரும், பொருள் பெற்றோரும், அதிகாரிகளும் கூடி நடத்தும் திட்டமிதுவே. இதில் பாமர மக்களுக்கு எந்தப் பொறுப்புமில்லை. பொதுத் தேர்தல் என்று பெயர் கொடுத்துவிட்டு, பலவித சூட்சிகளால் ஆதிக்கமுடையோரே தங்களையே தேர்தல் செய்துகொண்டு ஆட்சி புரிந்துவரும் திட்டமாகும். தொழிலாளருக்கு பிரதிநிதியாக வருகிறவன், அவர்கள் வாழ்வை ஆளும் அந்த மில் அதிகாரியே, அந்த ரயில் அதிகாரியே, அந்த சுரங்க (**Mines**) அதிகாரியே, அந்த காபி தேயிலை தோட்ட அதிகாரியே இந்த ராஜாங்கத்திலும் ஆளுகின்றான். எவன் நம்மை தொழில்சாலைகளிலும், ரயில் வேலைகளிலும், கப்பல் வேலைகளிலும், பாங்கு முதலிய ஸ்தாபனங்களிலும், வேலை வாங்கி அதிகாரம் செய்து, வயிற்றையும் ஜீவனத்தையும் அடித்தும் குறைத்தும் வருகிறானோ, அவனே இந்த ஜன நாயகத்தில் ஆதிக்கம் பெற்றவன். அவன் செய்யும் சட்ட திட்டங்களும், அவனது ஆட்சி முறையும், அவன் சார்பும், செல்வாக்கில், அவன் பாதுகாப்பும், எல்லாம் அவனது ஆதிக்கத்தைப் பெருக்க வைக்கும்படியானவைகளாய் இருக்குமேயொழிய, மற்றப்படி பாமரமக்களுக்கு, இருக்கும் நிலைமையை அதிகமாக மாற்றிவிடப் போவதில்லை. ஜன நாயகம்பெருத்த தேசங்களாகிய பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்டிரியா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள பாமர மக்களின் கதி என்னும்? அமெரிக்காவில் வேலை இல்லாதவர்கள் 50 லட்சத்திற்குமேலாம். ஜெர்மனியில் 43 லட்சம், பிரான்ஸில் 30 லட்சம், பிரிட்டனில் 30 லட்சமாம். நமது இந்தியாவில் கணக்கெடுத்தால் தெரியும் எவ்வளவு லட்சமோ, அல்லது கோடியோ வேலை இல்லாமையால் திண்டாடுகின்றவர்கள். இந்த அரசுகள் யாவும், ஜனநாயக அரசு, அதாவது டெமாக்ரஸி என்று கூறுவர். இந்த வல்லரசுகள் எல்லாம் உண்

மையில் ஜன நாயகமாக அல்லது ஜனங்களால் ஜனங்களுக்காக ஜனங்கள் மூலமாக நடக்கும் அரசு புரியப்பட்டு இருந்தால், ஜனங்களே தங்களுக்கு வேலை இல்லாமல் செய்து கொள்வார்களா, என்று கேட்கின்றோம்? உண்மையில், இந்த அரசுகள் யாவும் நடப்பது ஜனங்களால் அல்லவே அல்ல. சில வலியவர்களே, தங்கள் வலிமையால் புலி, பசுவின் தோலை போர்த்திக் கொண்டதுபோல, ஜனங்களுடைய பெயரை போர்த்திக்கொண்டு ஜனங்களுக்கே அரசு புரிகிறோமென்று நடித்து வருகின்றார்களென அறிக. திரு. காந்தியாரும், "தரித்திர நாராயணனுக்கே" காங்கிரஸ் சுயராஜ்யமென்பதும், அதே பாசாங்கே. எப்படி காந்தியார் மில் அதிகாரிகளுடனும், ஜமீன்தார்களுடனும், தனவந்தர்களுடனும், மத குருக்களுடனும், மடாதிபதிகளுடனும், வருணாஸ்ரம தர்மிகளுடனும் கலந்து உறவாடிக்கொண்டு, ஏழை நாராயணனுக்குத் தகுந்த சுயராஜ்யத்தை, பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பதிலாக உண்டாக்குவார் என்று கேட்கின்றோம்? இந்த சுயராஜ்யம் காந்தியார் வணங்கும் "கடவுளுக்கே" அற்புதம்.

பொது மக்களை பசிப்பிணியிலிருந்து மீட்டும்படியான சுயராஜ்யத்தை வட்டமேஜையிலும் பேசவில்லை. காங்கிரஸ் திட்டத்திலுமில்லை. எவ்விதம் பட்டாதிபதிகளையும், மடங்களையும் ஒருபக்கம் தழுவிக்கொண்டு, ஜாதிமத வாதிகளையும் இன்னொரு பக்கத்தில் அணைத்துக்கொண்டு, பாங்கி முதலாளிகள், மில் முதலாளிகள், சுரங்க முதலாளிகள், நில முதலாளிகள், வீடு வாசல் முதலாளிகளுடன் கூடிக்கொண்டு, தரித்திர நாராயணனுடைய பசித் தீவினையை எப்படி தனது சுயராஜ்யத்தில் காந்தியார் போக்கப்போகின்றாரென்றும் கேட்கின்றோம்? இந்த கலியுகத்தில் கதைகளில் கூறியுள்ள வற்றாப் பொய்கைகளும், வடியா அன்ன பாத்திரமும் காண்பதரிது! அப்படி



இருக்க, கொடாத கைகளை திரு. காந்தியார் எப்படி கொடுக்க செய்யப்போகின்றனரோ அதுவும் தெரியவில்லை? ஒன்று காந்தியாருக்கு தெரியப்படச் சொல்கின்றோம். தானத்தால் தரித்திரம் அதிகப்படுமே யொழிய, குறைவுபடா. இரண்டாவது அன்னாடம் சர்க்காவை வோட்டி ஒரு அணா மூன்று பை சம்பாதனையால், தரித்திர நாராயணன் இன்னும் என்றும் அடிமையாகவே இருப்பான். தானம் கொடுக்க, கொடுக்க வருமானம் குறைய குறைய தரித்திரமும் அடிமைத் தனமும் அவைகளால் வரும் சீர்கேடும் (Demoralisation) அதிகரிக்கமே ஒழிய, திருப்தியும் தைரியமும், சுயமரியாதையும் அதிகரிக்கா. சில சுயநலப் பிரியர்களால், உலகம் ஆளப்பட்டும், பொருள்கள் துர்வினியோகப்பட்டும், வருகின்றபடியால் தான், பாமரமக்கள் உலக முழுமையும் துன்பத்திலாழ்ந்து வருந்துகின்றார்கள். இந்த ஆழ்ந்த உண்மையை உலகம் உணர்ந்து நடக்கின்றவரை, நாட்டுக்கு எந்த சுயராஜ்ஜியம் வந்தாலும் எதுவும் பயன்படாவென அறிக.

---

## கராச்சி காங்கிரஸ் திட்டம்.
## (Karachi Congress Constitution)

இந்த திட்டம் ஓர் 'காமுபிலேஜ் (Camouflarge) அதாவது, ஓர் தந்திரம் என்றே கருதவேண்டும். அந்த திட்டம் ஏழை மக்களாகிய தொழிலாளரையும் கிருஷிகளையும் ஏமாற்ற ஏற்பட்ட ஓர்யுக்தி. நாம் காரணமில்லாமல் இதை எழுத வரவில்லை. காங்கிரஸில் தொழிலாளருக்கென ஓர் கமிட்டி ஏற்படுத்தினோம். அது மூன்று நாளில் முத்து [illegible]பெய்து போய்விட்டது. ஏன்? அந்த கமிட்டியாரும், காங்கிரஸ் நிர்வாகத்தாரும் பூர்ஷுவா (Bourgeois)

அதாவது, முதலாளி வகுப்பைச் சேர்ந்தவர்களாதலால் இதனை நழுவ விட்டுவிட்டார்கள். அதே மாதிரியாகத்தான் இந்த கராச்சித்திட்டமும் நழுவ விடப்படும். அதற்கு சந்தேகமில்லை. அது நழுவவிட்டாலும், விடாவிட்டாலும், அது காரியாம்சத்தில் நடவாத காரியம். நிலத்தையும் நீரையும் தொழிற் சாலைகளையும், முதலாளிவயத்தே வைத்து, அதில் வேலை செய்வோருக்கு சீவனத்திற்குப் போதுமான சம்பளம் (**Living Wage**) எப்படி கொடுக்க முடியும்.? அதில் வேலை செய்யும் கர்ப்பவதிகளுக்கு எப்படி பிரசவவுதவி செய்ய முடியும் ? கொடுக்கவேண்டிய சம்பளத்தையே, கொடாமல் வம்பு செய்யும் முதலாளி, போதுமான வருமானத்தை எவ்விதம் மனம் வந்து அளிப்பான் ? இதுவோர் காங்கிரஸ் மருளென அறிக. காங்கிரஸ் சுயராஜ்யத்தில் இந்தியமக்களின் உயர்தர வாழ்வு பாதுகாக்கப்படப் போவதில்லை. இன்று இருந்து வரும் மாதிரியாகவே அவனவனுக்கு அதிர்ஷ்டப்படியும் (**Chance**), தந்திரப்படியும் அகப்பட்டதே லாபம். மற்றவர்களைப் பற்றி அவசியமில்லை என்றே அரசு நடக்கும். நல்ல உயர்தரவாழ்வு காக்கப்பட மாட்டாதாம்! ஆனால் மதங்களும், ஜாதியும், பொய்ப் புராணக்கதைகளும், எளியோரை அபகரித்த சொத்துக்களும், வீடுகளும், வாசல்களும், கோயில் குளங்களும், மூட நம்பிக்கைகளும், பாதுகாக்கப்படுமாம்! பலகோடி பல்லாயிரம் ஏழை மக்களுக்கு வேலை யுண்டாக்கி, ஒழுங்குபட்டு வாழத் திட்டம் செய்யப் போவதில்லையாம்! ஆனால் அவனவன் சம்பாதனையும் சம்பாதிக்காத சொத்துக்களையும், அவனவன் மனம் போனவாறு செலவு செய்து அழித்து விடலாமாம்! இதுதான் நாம் அறிந்தவரையில் காங்கிரஸ் சுயராஜ்யமாய் இருக்குமென அறிக. இந்த சுயராஜ்யம் யாருக்கு வேண்டுமோ அவர்களே நடத்தட்டும். அத



னால், பாமரமக்களுக்கு அதிகக்கேடோ, நன்மையோ வரப் போவதில்லை. அது திண்ணம். சுதேச ராஜ்யங்களில், பாமர மக்கள் எவ்விதம் வாழ்கின்றார்களோ அவ்விதமே காங்கிரஸ் சுயராஜ்யத்திலும் வாழ்வார்கள். வெள்ளையர் அரசிலிருந்து, கறுப்பு மனிதரிடம் அரசியல் மாறுவது நன்மையோ, தின்மையோ, அது அப்போதுதான் தெரியும். இந்த மாறுதலைப் பற்றி பொதுமக்கள் அதிக ஊக்கமடைவார்களென்பதும் சந்தேகமே.

ஆனால் இந்த அபிப்பிராயத்தை தேசியத்திற்கு விரோதமென்பார்கள். இது வீண் மிரட்டு. பொது மக்களுக்கு வேண்டியது வேலையும் அதன் முழுப்பலனையும் அடைய வேண்டிய நிச்சயமுமே. இந்த இரண்டும் இல்லாத ராஜ்ஜியம் எது இருந்தாலுமென்ன? இரண்டாவது, தேசியம் காட்டுமிராண்டிகளின் மனப்பான்மை என அறிக. தற்போது நமது மனதைத் தூண்டவேண்டியது, தேசியமல்ல. அகில தேசியமென அறிக. எந்த தொழிலாளிக்கும் தனக்கென்ற தேசம் பிரத்தியேகமாக வொன்றுங் கிடையா. எல்லா தேசங்களும் தொழிலாளிக்கு வொன்றே. ஆதலின் அகில தேச மனப்பான்மை உண்டாக்க வேண்டுமே வொழிய, போட்டியும், பேராசையும், இவைகளால் வரும் விரோதங்களும், விளைவிக்கக் கூடிய தேசியம் வேண்டவே வேண்டாம் என்போம்.

---

## காங்கிரஸ் உபாயங்கள்
## (Congress Tactics)

நமது காங்கிரஸ் சுயராஜ்யமடைய சில உபாயங்களை வற்புறுத்தப் படுகின்றன. அவையாவன :—கத்தர் உற்பத்தி செய்தல், தீண்டாமையை வொழித்தல், குடியை நிறுத்தல், இந்தி பாஷையை கற்றல், இந்நான்கு உபாயங்களும் (**Tactics**)

சுயராஜ்யமடைய அநுகூலமாய் இருப்பதாகவும், அதனால் அடையும் சுயராஜ்யம், பரிசுத்தத் தன்மையைப் பொருந்தி இருக்குமென்பதும் நமது காங்கிரஸின் வாதம். இந்த வாதம், பூச்சாண்டிவாதமே வொழிய, வேறில்லை. கைராட்டினத்தால் நூல் நூற்று, சுயராஜ்யம் பெற முடியுமானால், கைராட்டினங்கள், நாடெங்கும் ஓடின காலையில் ஏன் நமது சுயராஜ்யம் நமது கையை விட்டுப் போய்விட்டது? மகமதியர் படையெடுத்த காலையில், கைநெசவு தானே இருந்துவந்தது? இருந்தும், இந்துக்கள் தங்கள் ராஜ்யத்தை ஏன் இழந்தனர்?

---

## கத்தர்—ராட்டினம்
## (Kathar and Charka)

கத்தரை தேச முழுமையும் அணியும் பட்சத்தில், பிரிட்டிஷ் அரசு, லங்காஷையர் மான்செஸ்டருக்கு பயந்து சுயராஜ்யமளிப்பார் என்பது வோர் யுக்தி. பிரிட்டிஷர் ஆக்கத்தை உணர்ந்தவர்கள், இந்த துரும்பின்மேல் இந்த நம்பிக்கை வையார். மூன்றாவது, கத்தர் பரிசுத்தத்தைக் குறிக்குமென்பார். கையால் செய்த வஸ்துக்கள் எல்லாம் சுத்தமெனப்படுமாயின், முறமும், தொடப்பமும், பரிசுத்த வஸ்துக்களாகுமன்றோ! நான்காவது, கத்தரால், வேலை இல்லாதாருக்கு வேலையும், சீவனமும் உண்டாகுமென்பார். இது வுண்மையாய் இருக்கலாம். ஆனால் கதரால் உண்டாகும் சீவனம் விரும்பத்தக்கதா? நாள் வொன்றுக்கு அணா ஒன்று, கொடுக்கும் சீவனத்தையா, நமது ஏழைகளுக்குக் காட்ட வேண்டும்? இதைவிடக் கேவலமான வாழ்க்கை வேறெங்குமிருப்பதாக நினைக்க இடமில்லை. நமது நாட்டில் சுயமரியாதைக்குத் தகுந்த வருமானத்தை தரத்தக்க வேலைகள், பல்



லாயிரம் இருக்க, செத்துப்போன கை ராட்டினத்தையேன், ஏழைகளைக் கொண்டு புதிப்பிக்க வேண்டும்? நமது திரு. காந்தியார் புதிய ரஷ்யாவைப் போய்பார்த்து வந்த பிறகு, மரித்துப்போன பழமை ராட்டினங்களை புதுப்பிப்பாரா என்று பார்ப்போம்? தொழிலாளியின் சுய மரியாதையைப் பார்க்க வேண்டுமானால், ரஷ்ய நாட்டைப் போய்ப் பார்த்து வரவேண்டுமென்று, பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் (**Bertrand Russel**) என்ற தத்துவக்கியானி கூறுகின்றார். நமது நாட்டு மனிதனை நாளெல்லாம் வேலைசெய்து, அணா வொன்றை சம்பாத்தியம் செய்யென்று சொல்லுவது மனித வர்க்கத்தை அவமதிப்பதாகும். நல்ல வேலை கொடுக்கத் தகுதியுள்ள பொருளாளிகளையும், முதலாளிகளையும், வேலை இல்லாதாருக்கு சீவனத்திற்குப் போதிய வேலை கொடுக்கச் செய்ய எத்தனிக்காமல், சர்க்காவைக்கொண்டு நூற்கச் சொல்வது இந்த காலையில் பாதகமெனவே கூறல் வேண்டும். இதனை அறிந்தோர், இந்த வேலையை, அடிமை வேலை என்றும் (**Slave Labour**), நெற்றி நீர் வடிக்கும் வேலை (**Sweated Labour**) என்றுங் கூறுவர். ஐந்தாவது, உலகில் சாதாரணமாக செய்யாத வேலையை மகாத்மா ஏன் திரும்ப வரவழைக்கின்றார் என்றால், அவர் பிற்போக்குடையவராதலாலென அறிக. அவர் டால்ஸ்டாய் (**Tolstoi**) தத்துவத்தைக் கைப்பற்றியவர். எந்திரங்களை தாக்குகின்றவர். உலக சுக போகங்களை வெறுத்தவர். ஆடையில்லாத ஆதி மனிதனே கபடமில்லாதவன் என்கின்றவர். பழமையை ஆதரிப்பவர். இராம ராஜ்ஜியமே, சிறந்த ராஜ்ய மென்பவர். இத்தியாதி பிற்போக்குடையவருக்கு, கைராட்டினமும், கத்தரும் அவர் மனதை கவராமல் போகா. இதுதான் கத்தரின்பேரில் அவருக்குள்ள மோகம்! அவர் சொன்னபடியே கிளிப்பிள்ளை

க..போல் நடக்கின்றவர்கள், அவருடைய காங்கிரஸில் அனே சீடர்கள் உளர். இதுதான் கத்தரைப் பற்றிய காங்கிரஸ் விசேடம்!

---

## தீண்டாமை.

தீண்டாமை யொழிக்க வேண்டுமென்ற உபாயத்தை சுயராஜ்ஜிய கிளர்ச்சியில் திரு. காந்தியார் எடுத்துக் கொண்டதற்கு காரணம் அநேகருக்குத் தெரியாதிருக்கலாம். காந்தி சொன்னாலும், சொல்லா விட்டாலும், "தீண்டாமை" மறைந்தே வந்து கொண்டிருக்கின்றது. பல சந்தர்ப்பங்களில், தாழ்ந்த வகுப்பார், பட்டணங்களில் வித்தியாசமின்றி உலாவுகின்றார்கள். அந்த கூட்டங்களில் சிலர் அவர்களுடைய க்ஷேமத்தைக் குறித்து பாடுபட்டு வருகிறார்கள். கிருஸ்தவர்கள் மகமதியர், பிரமோஸமாஜ்காரர் முதலியவர்கள் சீர்திருத்தக்காரர்கள் (**Reformers**) அவர்களை வித்தியாசமின்றி தங்கள் ஜன சமூகத்தில் சேர்த்துக் கொள்ளுகின்றார்கள். ஸர்க்காரும், அவர்கள் நிலைமையை உயர்த்த கவனித்தும் வருகின்றார்கள். ஆனால், தீண்டாமையை இந்து சமூக ஊழலென்று மாத்திரம் கருதப்படாது. இது ஆதி முதற்கொண்டு இந்தியாவில் பொருளாதார பிரச்னையாகவே இருந்து வருகிறது.

---

## தீண்டாமை ஓர் பொருளாதார பிரச்னை.

நமது தாழ்த்தப்பட்ட வகுப்பார் (**Depressed Classes**) சுமார் 5, 6 கோடி இருப்பதாகச் சொல்கின்றார்கள். இவர்களுடைய பொருளாதார நிலைமை, இதர இந்திய வகுப்புக்காரர்களைவிட மிகவும் கேவலமானதாகச் சொல்ல முடியாது. முக்கியமாக, இவர்கள் கிராமங்களுக்கப்பால் வசித்து வருகின்றவர்கள். பழக்கத்தினால், இந்த பகிஷ்காரத்தை, அவர்களும் கவனிக்கவில்லை. அவர்களில் பெரும்பான்மையோர், தாங்களே கிராமங்களுக்கு வெளியில் இருக்க சம்மதித்து வந்திருக்கின்றனர். இதனைத் தடுத்து, சேரிகளிலிருந்து வெளியேறி மற்ற வகுப்புகள் வசிக்கும் இடங்களில் வாழ்வதற்கு பொருளாதாரமில்லை. இதுவே அவர்கள் முன்னேற்றத்திற்குத் தடையாய் இருந்து வருகின்றது. இதனை முதலில் ஒழிக்கப் பாடுபடாமல், இந்த கூட்டத்தாரை கோயிலில் சேர்த்துக் கொள்ளுங்கள், தெருக்களில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கட்டுப்பாடு போடுவதில் பிரயோஜன மென்னை? எளியவன், எப்போதும் எங்கும் தீண்டப்படாதவனாகவே இருந்து வருகிறான். அவன் வாழ்வை உயர்த்திக்கொள்ள சில பாதுகாப்புகளைக் கொடுத்து உதவி செய்யும்பக்ஷத்தில் ஏன் அவன் தீண்டாதவனாகக் கருதப்படுவான்? அவன் நன்றாக உண்டு, உடுத்தி வாழ்ந்துவருவானேயாகில், யார் அவனைத் தீண்டாதவன் என்று கூறுவார்கள்? ஒரு காலத்தில் தீண்டாத கூட்டத்தில் சேர்ந்திருந்தவர்களில் சிலர், பொருள் படைத்த மாத்திரத்தில், அவர்கள் தீண்டாமை சொல்லாமலே ஒழிந்துவிட்டது. தீண்டாமைக்கு அடிப்படையாகவுள்ளது, அந்த சமூகத்தாருடைய இல்லாமையே (**Poverty**). நிலமில்லை, நீரில்லை. நல்வீடில்லை, கல்வி இல்லை, கேள்வி இல்லை, அக்கம்பக்கம் சுத்தமில்லை, சற்சன சாவகாசமில்லை, தனவந்தரால் ஆதரிப்பு இல்லை, சர்க்காரால் பாதுகாப்பில்லை. இந்தக் குறைகளுக்குக் கீழ்ப்பட்டுவரும் மனிதன் ஏன் தீண்டாதவனென்று கருதப்படான்? இந்தக் குறைகளை நீக்காமல், தீண்டாமையைப் போக்குங்களென்று கூச்சலிடுவது பகல் வேஷமேயாகும். இன்று இந்திய உலகம் பொது உடமையை அனுசரிக்கும் பட்சத்தில், தீண்டாமை ஏது? தாழ்த்தப்பட்டவர்களேது?

வறுமை ஏது? பஞ்சமேது? பார்ப்பான் ஏது? பறையனேது? கண்ணிமைப் பொழுதில், இந்த ஜாதி சமய பொருளாதார வித்தியாசங்கள் யாவும், மறைந்துபோம். காங்கிரஸ்காரர், தங்களை ஊர் மெச்சிக்க இந்த தீண்டாமைக் கூச்சலிடுகின்றார்களே யொழிய, மற்றபடி தீண்டாதாருடைய வயிறு மெச்சிக்க அவனுக்கு ஆதரவு அளிக்கக் கூச்சலிடுவதில்லை. தீண்டாதானுக்கு என்று நன்றாக உண்ணவும், உடுக்கவும், வசதிகள் ஏற்பட்டபோதே அன்றே அவன் மற்ற சமூகத்தாரைப்போலாவான் என்பதற்கு ஐயமில்லை. தனிவுடைமை திட்டத்தில், சகல பாதுகாப்புகளையும் அவனுக்கு அளித்து அவனை உயர்த்துவதே சர்க்காருடைய கடமையாகும். எவ்வளவு இடங்கள், சட்ட சபைகளில் அவனை உண்மையாக ஆதரிப்பவர்களுக்குக் கொடுப்பதாலும் எந்தவித பாதகமுமில்லை. அதனால் அவனுக்கு நன்மையே உண்டாகும். அவனை மனுஷனாக மதிக்கப்படுவதற்கு, எல்லாக் கதவுகளையும் திறக்கப்படல் வேண்டும். ஜாதிமதம், பொருளாதாரம் இவைகளில் உயர்ந்து இருப்பவர்கள் வசம், இனியும் அவனை ரக்ஷிக்கவாவது, அல்லது அவனைக் காப்பாற்றவாவது விடுவது நண்டைச் சுட்டு, நரியைக் காவல்வைத்த மாதிரியேயாகும். தாழ்த்தப்பட்டவர்களுடைய அனுதாபிகள், அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்தத் தான் முக்கியமாக பாடுபடல்வேண்டும். இதைச் செய்தால் கோயில் பிரவேசமோ, குளப் பிரவேசமோ தானே வந்துவிடும்.

---

## குடியாமை.
## (Prohibition)

வெறிக்கக் குடிப்பது, மனிதருடைய பூர்வ பழக்கம். ஆதிவேதியரும், அவர்கள் தெய்வங்களும், குடித்து வெறித்து,



களித்திருந்ததாக, ரிக்வேதமாகிய முதல் வேதத்தில் கூறியுள்ளது. அது முதல், அதற்கு முந்தியும் மனிதர் ஓர்வித மதுபானத்தை குடித்து வந்திருக்கின்றார்கள். தற்போது, உலகமெங்குமே, ஏதோவோர் மதுபானம் இருந்தே வருகிறது. இதனைத் தடுக்க பல உபாயங்களைச் செய்து வருகின்றனர். சென்ற 100 வருஷ காலமாக, டெம்பரன்ஸ் என்ற "மதுமிதப் பிரசாரங்கள்" மதுமிதவாதிகளால் நடைந்தேறி வந்திருக்கிறது. ஆனால், எந்த ஊரிலும், குடிப்பது முழுமையும் நின்றதாகத் தெரியவில்லை. அமரிக்காவில் குடியை சட்டத்தில் மாத்திரம் நிறுத்தி விட்டார்கள். இருந்த போதிலும், குடி நின்றபாடில்லை. மற்ற நாடுகளில் குடி, ஞாயமென்றும், அது நீதி வழுவாகாதென்றும், சர்க்காரே மதுபானங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தும் வருகின்றார்கள். ரஷ்யா தேசத்தில் ஒன்றுதான், மெஞ்ஞான விதிப்படி குடியை நிறுத்த பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். ரஷ்யாவில் குடியை நிறுத்த செய்துவரும் முயற்சி கை கூடிவருவதாக சொல்லுகின்றார்கள். முதலில், குடியை முற்றிலும் நிறுத்திப் பார்த்தார்கள். ஆனால், அந்த மறியல் பயன்படவில்லை. மது கடைகளை சாத்திவிட்டும், ஒவ்வொரு வீடுகளிலும் மதுவை ரகசியத்தில் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இதனை யாரால் தடுக்க முடியும்? ஒரு கெடுதியை நிறுத்தப்போய், ஒன்பது கெடுதிகள் அதன் கூடவே கிளம்புவதாகத் தெரியவந்தது. மயக்கம் தரக்கூடிய அபினி, கெஞ்சா மற்றும் பலவித விஷங்களை உண்ண ஆரம்பித்தனர்! இதைக் கண்ட ரஷ்ய அரசு, திரும்பவும் மதுவை மிதமாகச் செய்து விற்கத் தலைப்பட்டனர். மது விற்கும் நேரங்களையும், எவ்வளவு விற்க வேண்டுமென்பதையும், நீதிக்குட்படுத்தி, குடிப்போருடைய வாழ்க்கையை, கல்வி கேள்விகளாலும் நிரப்பி, ஓய்வு நாள்களில் அவர்கள் மனதை

காலியாக வைக்காமல், சினிமா, வேடிக்கை, கூத்து, ஆடல், பாடல் சங்கீதம் முதலிய கேளிக்கைகளால், நிரப்பியதும், அவ்வூரில் குடி அதிகப்படாமல், குறைந்தே வருகின்றதாம். ரஷ்யருக்கு ஓர்வித சுயமதிப்பு உண்டாகி வருகின்றதாம். இந்த பண்டைகால குடிப்பழக்கத்தை நிறுத்த ரஷ்யர் செய்து வரும் தடைகளை நமது தேச சர்க்காரும், மதுவிலக்கு பிரசாரகர்களும், காங்கிரஸ்காரர்களும் கவனிக்கப்பாலது.

---

## குடியாமை—காங்கிரஸ் மறியல்.
## (Picketting)

காங்கிரஸ் செய்துவரும் மறியலைப்பற்றி ஒரு வார்த்தை இவ்விடம் குறிப்பிடத்தக்கது. மதுவை நிறுத்தி விடுவதால் 8, 9 கோடி ரூபாய் வருமானம் குறைந்து விடுவதாக சர்க்காருடைய வாதம். கெட்ட வழிகளில், பணத்தை வசூலிப்பது ஞாயமற்றது என்பது காங்கிரஸ் வாதம். ஆனால் சர்க்காரோ ஆதிக்கமுடையவர்கள். இந்த வரும்படி குறைந்தால், வேறு வரும்படிகளை உண்டாக்கிக் கொள்ளுகின்றார்கள். பொதுச் செலவைக் குறைத்து, பொது ஜனக்களின் வாழ்வை தாழ்த்தி விடுகின்றார்கள். சிக்கனம் சிக்கனமென்று உத்தியோகஸ்தரையும், தொழிலாளர்களையும், தள்ளி விடுகின்றார்கள். மேலும், காங்கிரஸ் செய்யும் தீவிர மறியல்களால், விவகாரத்தில் ஒன்றும் பயனில்லை. குடி குறைந்தபாடில்லை. குடிக்கிறவன் குடியாமல் நின்றபாடில்லை. சர்க்காருக்கு உண்டாகும் நஷ்டமெல்லாம், ஒன்றுக்கு இரண்டாக இதர விஷயங்களில் வரிபோட்டோ, சிக்கனம் செய்தோ, பூர்த்தி செய்துக் கொள்ளுகின்றார்கள். இந்த மறியல் வியர்த்தமென்றே நமது அபிப்ராயம். இதனை தற்போது விட்டு விட்டு, குடியனுடைய வீட்டையும், வாழ்வையும் உயர்த்த



பாடுபட்டால், எவ்வளவோ நன்மையாகும். நான் ஒன்று கேட்கின்றேன். நாயும், பூனையும், ஆடும் மாடும், கோழியும் வாத்தும், எலியும் பூனையும், கழுதையும் பன்றியும், கந்தையும் அழுக்கும், ஆணும் பெண்ணும், குட்டி குழந்தைகளும் ஒரே இடத்தில் தங்கி வாழும் ஜன சமூகங்களுக்கு, இதுகாறும் நாம் என் செய்து வந்தோம்? சாக்கடைகளும், நரகலும், சேறும் துற்கந்தமும் கலந்துள்ள இடங்களை நமது சுற்றுப் பக்கங்களில் வைத்துக்கொண்டு, அவைகளின் மத்தியில் நமக்கு உழைத்துவரும் மக்களை வசிக்க விட்டுக்கொண்டு, அவர்களை கட்குடியாதீர்களென்று ஞானோபதேசம் செய்வதென்றால், இதைவிட உணர்ச்சி அற்ற தனம் என்ன இருக்கின்றது? குடியை நிறுத்த வேண்டியது அவசியமே. ஆனால் அதை நமக்கு அரசியல் ஆதிக்கம் வந்த காலை செய்து கொள்ள ஆவகாசமுண்டு. தற்போது அதைவிட, முக்கிய விஷயங்களாகிய, சுத்தம் சுகாதாரம் வாழ்வை உயர்த்துதல், கல்வி கேள்வி, பரவச்செய்தல் முதலிய முக்கிய விஷயங்களை கவனிக்கவேண்டிய காலம் இதுவே. குடியை ஒரு கணப்பொழுதில் நிறுத்த பாவித்து மறியல் செய்வதை விட, குடியைவிட கெடுதிகளாகிய, அறியாமை, சாதி, மத, துர்பழக்க ஒழுக்கங்கள், பகுத்தறிவின்மை முதலியவைகளை நீக்குவதே தகுதியான வேலையாகும். கிராமங்களில் அறியாமையால் விளையும் கேட்டை நன்குணர்ந்தார், அல்ப சொல்ப சீர்திருத்தங்களை கவனியார். மூடபக்தி, ஜாதி வேற்றுமைகளை வேர் களைந்துவிட முயர்ச்சி செய்ய வேண்டுமென்பதே நமது கடமைகளில் முக்கியமென அறிக.

## இந்திபாஷை அவசியமா?

## (Is Hindi Necessary?)

இந்திபாஷை.—இந்திபாஷையை எல்லோரும் கற்க வேண்டுமா? பாஷையில் தெய்வத் தன்மையாவது (**Divinity**) அல்லது, நிவேதனமாவது (**Sacredness**) கிடையாது. வேத மனுஷனைப் போலவே, கிளிப்பிள்ளையும், மைனாவும், பேசுகின்றன. நமது தூர பங்காளிகளாகிய, வாலில்லா குரங்குகளும் பேசுகின்றனவாம். ஜீவராசிகள் பரிணமித்து வரும் காலையில், சில பட்சிகளுக்கும், குரங்கு மனித வர்க்கத்துக்கும் ஏறக்குறைய பேசும் அவயவங்கள் ஏற்பட்டன. அவைகள் மூலமாக, நமது மூதாதைகள் பேச முயற்சித்து, அதன் மூலமாக, பற்பல பாஷைகள் உண்டாயின. பாஷையின் லட்சணமென்னவெனில், நமக்குத் தோன்றும் பொருள்களுக்கு பெயர் இடுவது. எந்த பாஷை, வளர்ந்து கொண்டு வரும் அனுபவத்தை மிக நன்றாக குறிக்கின்றதோ, அதுதான் உயர்ந்த பாஷை என்று சொல்லலாம். உலகிலுள்ள பாஷைகளுக்கெல்லாம், ஆங்கில பாஷையே, அதிக அனுபவங்களைக் குறிக்கப் பெற்றுளது. அதிகமான பொருளின் பெயர்களாலும் பேசப்படுகிறது. இந்த இரண்டு லட்சணங்களால், இங்கிலீஷ் பாஷையே சீவிக்கும் தன்மையை (**Survival**) யுடையதென்போம். ஆனால் தேசங்கள் தோறும் பாஷைகள் வேறாக இருக்கின்றபடியால், அந்தந்த பாஷையையே. அந்தந்த தேசத்தார் உபயோகித்துக் கொண்டு வருவார்கள். ஆதலின், இந்தி பாஷையை மாத்திரம் நமது இந்தியாவில் அதிகமான பேர் பேசி வருகிறபடியால், அதையே சகலருங் கற்றுக் கொள்ள வேண்டுமென்பது தகாத காரியம். தற்காலங்களில் ஓரே பாஷையை, உலகமோ, தேசமோ பேச



வேண்டுமென்ற அவசியமில்லை. ஏனெனில், ஒரு பாஷையிலிருந்து வேறு பாஷையில் விஷயங்களை மொழி பெயர்த்துக் கொள்ளலாம். இதுதான் விவகாரத்திற்கு வேண்டியது. அச்சு அடிக்க ஏற்பட்ட பிறகு, பாஷையை தர்ஜமா செய்வது சுலுவாய் விட்டது. ஒரு பாஷை நமது தேசத்திற்கு வேண்டுமென்றால், ஏன் ஆங்கிலத்தையே வைத்துக் கொள்ளக்கூடாது? தற்கால ஞான முழுமையும் இங்கிலீஷ்பாஷை மூலமாகத் தெரிந்து கொள்ளலாம். இதற்கு நமது இந்தி உதவவே உதவா. ஏன் அந்தந்தந்தத் தாய் பாஷையை வைத்துக்கொண்டு அகில தேச ஞானத்தை அந்தந்த பாஷையிலேயே தெரிந்து கொள்ளக்கூடாது? இதுதான் மிக நேரானவழி சோவியத்ரஷ்யாவில் அந்தந்த பாஷையிலேயே, அந்தந்த கூட்டுறவு நாடுகள், அரசியலை நடத்தி வருகின்றன. நமதுநாடு கூட்டுறவு நாடாக ஆகும்போது அந்தந்த பாஷைகளே, அந்தந்த நாட்டில் உபயோகிக்கலாம். மத்திய ராஜ்யத்திற்கு ஒரு பாஷை வேண்டுமென்றால் இந்தியோ அல்லது இங்கிலீஷோ சிலர் மாத்திரம் பேசக் கற்றுக் கொள்ளலாம். இதுதான் சுலுவான நேர்வழி என்போம். 35 கோடி ஜனங்கள், ஓரே பாஷையைப் பேசவேண்டுமென்பது அனாவசியம். அது முடியாத காரியம். உலக முழுதும் ஓரே பாஷை பேச வேண்டுமென்ற கிளர்ச்சி ஒன்று வெகுநாளாக இருந்துக் கொண்டே வருகிறது. அந்த பாஷையின் பெயர் எஸ்பராண்டோ (**Esperanto**). இதனை நமது குழந்தைகள் கற்றாலும் பிரயோசனமுண்டு. அகில தேச கூட்டுறவுக்கு சகாயப்படும். இந்த பாஷையை சுலுவிலும் கற்றுக்கொள்ளலாம். எல்லா பாஷையிலுள்ள சப்தங்களை எடுத்துத் திரட்டி, அகில தேசத்தார் எளிதில் கற்றுக்கொள்ளத் தக்க எஸ்பராண்டோ என்ற புது பாஷை யொன்றேயுளது. அதை இனி வரும்

உலகம் ஆதரிக்குமாதலால், இப்பொழுதே அதை நமது முதல் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டுமென்று நமது நாட்டு அறிஞர்கள் முயர்ச்சிப்பார்களென நம்புகின்றோம். சென்ற வருஷம் கூடிய எஸ்பராண்டோ மகா நாட்டில், 100 தேச பாஷையைப் பேசுவோர் கூடி எஸ்பராண்டோவில் விவகாரத்தை நடத்தினார்களாம். இதுவன்றோ உலக வொற்றுமைக்கு சிறந்த அடையாளம்!

---

## சுயராஜ்ய பின்போக்கு.

நமது தேசிய காங்கிரஸ் கோரும் சுயராஜ்யம், மற்ற தேசங்களிலுள்ள சுயராஜ்யங்களுக்கு எவ்வளவோ கீழ்த் தரத்தில் இருக்கக் கண்டோம். இதனுடைய போக்கெல்லாம், பிற்போக்கே. புராண காலத்தில் ஆட்டிவந்த கைராட்டினங்களும், கைத்தறிகளும், மனிதனை மீளவிடாத ஜாதி, மத, புராண தற்காப்புகளும், இராமர் காலத்திய தனிவுடைமை திட்டமும், அடங்கியுள்ள சுயாராஜ்ய மெனக் கண்டோம். காங்கிரஸ் ராஜ்யத்தில், தொழிலாளருக்கு இருக்கும் நிலைமையே காப்பாற்றப்படுமோ என்பது சந்தேகம். ஏனெனில், காலை முதல் இரவுவரை வுழைக்க வேண்டி வரும் கைராட்டினங்களும், கைத்தறிகளும், கட்டை வண்டிகளும் கட்டை கலப்பைகளும் கொண்டு தொழிலாளர் வேலை புரிந்து வர வேண்டுமென்ற பயம் இருந்தே இருக்கின்றது. தொழிலாளருக்குரிய வேலை நிச்சயம், வேலையில் ஆதிக்கம், போதுமான ஜீவனம், கிடைக்குமென்பது பகற் கனவெனக் கண்டோம். சாமான்ய ஜனங்களுக்கு தற்கால ஞானமும் கல்வியும் சம்பூரணமாக கிடைக்குமென்பதும் நிச்சயமில்லை. நமது வாசல் சுத்தத்திற்குமேல் தேச சுத்தம், சுகாதாரம், கிராம சுத்



தம, சுகாதாரம், நாடுசுத்தம் நகரசுத்தம் அதிகமாக கவனிக்கப்படுமோ என்பதும் சந்தேகம். கராச்சி திட்டத்தின்படி மதங்களும், ஜாதிகளும், புராண நடவடிக்கைகளும் ஆதரிக்கப்பட்டு, பாமர ஜனங்கள் பகுத்தறிவின்றி மிருகாதிகளைப் போல் வாழ்வது நிச்சயம். நவீன ஆராய்ச்சி, நவீன ஞானம் நவீன தொழில், நவீன கருவிகளைக்கொண்டு இந்தியருடைய வாழ்வை அடிமைத் தனத்திலிருந்து மீட்கப்படுமோ என்பதும் சந்தேகம். நவீன வைத்தியரைக் கொண்டு, நமது நாட்டு மக்களுக்கு நோய்களை தீர்க்கப்படுமோ என்பதும் சந்தேகம். தேசியம் தேசியம் என்றும், நமது நாடு புண்ணிய பூமி என்றும், ராமர் நாடென்றும், பாரத நாடென்றும் வைதீக நாடென்றும் குறுகிய மனப்பான்மையை வளர்த்து, அகில தேச வுணர்ச்சியை வெறுக்க செய்யுமோ என்ற பயமும் இருந்துக்கொண்டிருக்கிறது, நாடு முழுதையும் அதிர்ச்சி செய்து வரும் தீண்டாமை கோஷம், கூச்சலாகவே முடிவு அடைந்து வருவதை நோக்கினால், "பள்ளுபறை. பதினெட்டு" என்ற தாழ்த்தப்பட்டவர்கள் கதிமோக்ஷம் சுயராஜ்யத்தில், தற்போது இருக்கும் நிலைமையைவிட விசேஷமாக மாறுபடா என்பதும் திண்ணம். இத்தியாதி குறைகளைப் பெற்ற காங்கிரஸ் சுயராஜ்யம், யாருக்கு உதவி எனக் கேட்கின்றோம்? காங்கிரஸ் சுயராஜ்யம் இன்றும், என்றும், உலக சுக போகங்களை அநுபவித்துவரும் சிறு பான்மையோராகிய மில் சொந்தக்காரர்களுக்கும், பாங்கி அதிகாரிகளுக்கும், வர்த்தகர்களுக்கும், லாயர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும், வீடு சொந்தக்காரர்களுக்கும், நிலச் சுவான்களுக்கும், ஜமீன்தார்களுக்குமன்றி, பலகோடி பல்லாயிரவர்களாகிய, உழவன், கருமான், தச்சன், ரயிலோட்டி மாடோட்டி, கப்பலோட்டி, கலப்பையோட்டி, வண்டியோட்டி, பறையன், சக்கிலி,

தோட்டி செம்படவன், ஒட்டன், உப்பரவன், ஏழைப்பெண்கள், ஏழைப் பிள்ளைகள், இத்தியாதி 30 கோடி மக்களுக்கு, காங்கிரஸ் சுயராஜ்யம் உதவாதென அறிக. நமது கவிஞர், "ஆபத்துக் குதவாப்பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம்" என்ற உதவாத ஏழு பண்டங்களோடு, காங்கிரஸ் சுயராஜ்யமும் உதவாத எட்டாவது பண்டமெனக் கொள்ள வேண்டும். இனி மற்ற இரண்டு மூன்று தேசீய கட்சிகளை சுருக்கமாக விசாரித்து, அவைகளின் ஆபாஸங்களையும் விளக்க முற விளக்கலாம்.

---

## மிதவாதிகள்.

இவர்கள் சீர்த்திருத்தக்காரர்களெனவும், அழைப்பதுண்டு. இருக்கும் தேச நிலைமையை வைத்துக்கொண்டு, அங்கும் இங்கும் இத்தேச சீர்திருத்தங்களுக்கு பாடுபட்டு வருகின்றவர்கள் இவர்களே. இவர்களுக்கு சுயராஜ்யமென பிரத்தியேக தேசீய அரசியல்களைப்பற்றி கவலை இல்லை. இருந்துவரும் அரசியலிலேயே, பட்டம் பதவிகளைப்பெற்று, அரசியல் நடமுறையில் தங்களுக்கு ஆதிக்கத்தை பெறவே இந்த கட்சி தோன்றியுள்ளது. இந்த கட்சியாரால், பாமர மக்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்கா. முதலாளி கட்சிகளில், இவர்களொருவித முதலாளி கட்சி. சுயநலக் கட்சி என்றும் சொல்லலாம்.

---

## மற்ற தேசீய கட்சிகள்—ஜஸ்டிஸ் (Justicites)

இந்தமிதவாத வர்ணத்திற்கு சற்று மாறுகவுள்ள சில கட்சிகளும்வுண்டு. சுயகட்சி என்றும் (**Independant**), சுதந்தரகட்சி என்றும் (**Liberals**), தேசீயக் கட்சி என்றும் (**Nationalists**), சிறு பான்மை கட்சிகள் பலவுள. இவைகள் யாவும், முதலாளிகளுடன் சேர்ந்த ஒரு குளத்து நண்டுகள். தேசத்தில், இவர்களுக்கு செல்வாக்கு கிடையாது. இருந்தாலும் இந்த கட்சிகளை கோடீஸ்வரர்கள், சமீன்தார்கள், பெரும் பொருளுடையோர் ஆதரித்து வருவார்கள். செல்வ வந்தர்களுடைய செல்வாக்கை அதிகரிக்க ஏற்பட்ட கட்சிகள் இவை யாவுமென அறிதல் வேண்டும்.



---

## ஜஸ்டிஸ் கட்சி.

இது தென்னிந்தியாவில் தோன்றிய கட்சி. இதுவும் ஒருதரத்து முதலாளி கட்சியாகும். இது தோன்றுவதற்கு ஏற்பட்ட அவசரம் என்னவெனில், பிராமண வகுப்பார் பலர் சரித்திர காரணங்களால், ஆட்சியில் மிகுந்த செல்வாக்கு பெற்று வந்தனர். தென்னாட்டில், பிராமணர்கள் சிறு பான்மையரே. இருந்தும், சர்க்கார் உத்தியோகங்களிலும், நியாயஸ்தலங்களிலும், கலாசாலைகளிலும், எல்லா வகுப்பாருக்கு முந்தி அடைந்த கல்வித் திறத்தினால், நாட்டில் செல்வாக்கடைந்திருந்தனர். ஆனால், பிராமணரல்லாதார், தமிழ் நாட்டில் பெரும்பான்மையோராய் இருந்தும், வாழ்வின் பந்தயத்தில் பிந்தியவர்களாய் இருந்தனர். இதை திருத்திக் கொள்ளும் பொருட்டு, பிராமணரல்லாதார், சர்க்கார் உதவியை நாடி தங்கள் மக்களுக்கு சிற்சில உத்தியோக பாதுகாப்புகளை தேடிக் கொண்டனர். ஆனால், இவர்களுடைய முயர்ச்சியாவும், உயர்தரக் கல்வியிலும், உத்தியோகங்களிலும் சில இடங்களை தங்களுக்கென ஒதுக்கி வைத்துக் கொள்வதில் செலுத்தப்பட்டன. எந்த ராஜ்யத்திலும், சிறு பான்மையோருடைய செல்வாக்கைக் கருதி, சில உத்தியோகங்களையோ, சில இடங்களையோ, சில வழிகளையோ, ஒதுக்கி

வைக்க வேண்டிய அவசியம் வரும். இந்த ஞாயத்திற்கிணங்க, ஜஸ்டிஸ் கட்சியார், பிராமண ரல்லாதாருடைய உரிமைகளைக் காக்க ஏற்பட்ட கட்சியே. இதனாலும் கோடான கோடி பாமர மக்களுக்கு யாதொரு நன்மையுமில்லை. இவர்களும் முதலாளி தத்துவத்தில் சேர்ந்தவரென்பதை மறக்கலாகாது. முதலாளி ராஜ்யத்தில் கிடைக்கும் உத்தியோகமோ, அல்லது வசதிகளோ அல்லது சலுகைகளோ, முதலாளி, கூட்டத்தாருக்கு உபயோகப்படுமேயன்றி, பாமர மக்களுக்கு யாதொரு நன்மையும் தரா? இதுதான் முதலாளி திட்டத்தின் சித்தாந்தம். உலகமெங்கும் முதலாளி திட்டத்தின் பயனை அதன் கோஷ்டியாருக்கே நன்மையாக்கி வருவதையும், பாமர மக்கள் வதைந்து சிதைந்து வருவதையும் பார்க்கலாம். ஆதலின், ஜஸ்டிஸ் கட்சியார், தங்கள் கோஷ்டியாருக்கு என்ன நன்மையைத் தேடி வைத்தாலும், இந்த கோஷ்டியாரைச் சேர்ந்த கோடான கோடி பிராமணரல்லாதாராகிய தொழிலாளருக்கும், கிருஷிகளுக்கும், யாதொரு நன்மையும் உரியதாக்க முடியா.

---

## சுயமரியாதை இயக்கம்.

சென்ற 7, 8 வருஷங்களாக ஓர் சிறிய கூட்டத்தார், பகுத்தறிவை அடிப்படையாக வைத்து, நமது தென்னிந்தியாவில் பாமர மக்களுக்கென உழைத்து வருகின்றார்கள். இவர்கள் சமூக சீர்திருத்தக்கார ரென எடுத்துக் கொள்ளலாம். இவர்களுக்கு அரசியல் திட்டமொன்று 1932 வரை ஏற்படவில்லை. ஆனால், மற்ற அரசியல் கட்சிக்காரர்களை, சமூக வாழ்க்கையில் இருந்துவரும் ஊழல்கள் சம்பந்தமாக கண்டித்து வருகின்றனர். இவர்களுடைய முக்கிய நோக்கம், ஜன சமூக வாழ்க்கையில் உள்ள குறைகளை நிவர்த்தி



செய்யவும், மதங்களையும் ஜாதியையும் ஆதாரமின்றி நசுக்கித் தள்ளவும், பாமர மக்களின் அறிவை விளக்குவான் வேண்டி, அவர்கள் பகுத்தறிவைத் தூண்டி, பல ஆயிர வருஷங்களாக இந்தியரை வாட்டி வந்த துர்ப்பழக்க வொழுக்கங்களையும், கிரியை சரியை முதலிய கற்பனை கர்மங்களை யொழிக்கவும், புரோகிதரால் நேரும் மனத்தின் அடிமைத்தனத்தைப் போக்கவும், முயர்ச்சித்து வருகின்றனர். இந்த இயக்கம் யூரோப் தேசத்தில் தோன்றியுள்ள **Secular Society, Free Thought Society** முதலிய நாஸ்திக சங்கங்கள் செய்து வரும்திருப் பணியைப்போல், நம்மவர்களுக்கும் செய்து அவர்களுடைய கண்களை திறந்து வைக்க துணிந்து செய்யுமோர் கூட்டமாகும். இதை சுயமரியாதை சங்கமென்று அழைக்கின்றனர். இந்தக் கூட்டத்தார் நமது நாட்டுக்கு இன்னும் அதிக உபயோகமாக இருக்கும் பொருட்டு, இந்தப் பெயரைமாற்றி, சம தர்ம கட்சி என்று பெயர் வகிக்கும்படி கேட்டுக்கொண் டிருக்கின்றோம். இந்தக் கூட்டத்தார், நமது தேச முன்னேற்றத்திற்கு ஏற்பட்டிருக்கின்றாரென்பதை மறக்க முடியா. மற்ற கட்சிகளின் குறை, இந்தக் கட்சியில் இல்லை என்று சொல்லலாம். ஆனால், அரசியல் திட்டமொன்றை ஏற்படுத்திக்கொண்டு, பாமர மக்களுக்கு உபயோகமாகும்படி சம தர்மத்தை நிகழும் ஆட்சியில் அனுஷ்டித்து வர முயர்ச்சிப்பார்களே யாமாகில், நன்று நன்று, மிகவும் நன்றெனப்படும். நமது இந்த கோரிக்கை, 1938-ல் நிறைவேறியது நமது நாட்டின் பாக்கியமே யாகும்.

---

## மகம்மதிய பிரச்சினை.
## (Muslim Problem)

நமது இந்தியாவில் சுமார் 8 கோடி மகம்மதியர் இருக்கின்றார்கள். இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு, இந்த நாட்டை மகம்மதிய சக்கரவர்த்திகளாகிய பாட்சாக்களால் ஆண்டு வந்தனர். ஆனால், தற்போதோ, கல்வியிலும், செல்வாக்கிலும், பொருளாதாரத்திலும், இந்து சமூகத்தை விடத் தாழ்ந்தவர்களாய் விட்டார்கள். இந்தியாவில், சில நாடுகளில் மகம்மதியர் அதிகரித்தும், இந்துக்கள் குறைந்தும் வாழ்கின்றனர். ஆனால், பெரும் பான்மையாக இந்துக்களே தொகையிலும், செல்வாக்கிலும் மிஞ்சியவர்கள். பலவித சரித்திர காரணங்கள் நிமித்தம், இந்துக்கள் அரசியலிலும் வன்மைபெற்றுள்ளார். உலக மாறுதல்களினால், மகம்மதியரும் தங்கள் வகுப்பை அபிவிருத்திக்கு கொண்டுவர முயன்று வருகின்றார்கள். ஊரில் இவர்களுக்கும் சமத்துவம் கிடைக்க வேண்டுமென்று, மன்றாடுகிறார்கள். முக்கியமாக மகம்மதியத் தலைவர்கள் உத்தியோகங்களில் தங்களைக்கு பாகம் வேண்டுமென கிளர்ச்சிசெய்து வருகின்றார்கள்.

---

## இந்து மதப் பிரச்சினை
## (Hindu Problem)

சர்க்காரும் சில காரணங்களை முன்னிட்டு, மகம்மதியர்களை கண்ணோட்டமாகவே நடத்தி வந்தார்கள். இதனைக் கண்டிருந்து இந்து தலைவர்களும், தங்களுக்கும் இருக்கும் உத்தியோகங்கள் கிடைக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்யத் தலைப்பட்டனர். எவ்விதம் பிராமணரல்லாதார் பிராமண செல்வாக்கில் பாகங் கிடைக்க வேண்டுமென்று கிளர்ச்சி



செய்துவந்தனரோ, அவ்விதமே, மகம்மதியரும் உத்தியோக வேட்டையில் பங்கு போட ஆரம்பித்தனர். நாம் முன் சொல்லியவாறு முதலாளி திட்டத்தில் உத்தியோகத்தில் அந்தந்த வகுப்பார் போட்டி போடுவது ஸகஜமே. ஆனால் இதில் என்ன கெடுதி விளைந்ததென்றால், இந்த உத்தியோக போட்டியிலிருந்து, மதத்துவேஷம் கிளம்பிவிட்டது. மதத்துவேஷம் பெருகவும், சட்ட சபையில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் வேண்டுமெனவும், சில பாதுகாப்புகள் வேண்டுமெனவும், வாதிக்கின்றார்கள். மகம்மதியர், இந்த உரிமைகளைக் கேட்கவும், இந்துக்களும், தங்கள் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமென்று வாதிக்கத் தலைப்பட்டனர்.

---

## காந்தியாரின் தடுமாற்றம்.
## (Ghandi's Wobbling)

இவ்விருவர்களின் நடுவில், இரண்டு ஆட்டுச் சண்டையில் நரி அகப்பட்டுக் கொண்டதுபோல், காங்கிரஸ் விழிக்க வேண்டி வந்தது. ஆனால், காங்கிரஸ் உண்மையாகவே, பாமர மக்களுக்கு சுயராஜ்யத்தைக் கொண்டுவர பாடுபட்டால், தைரியமாக நின்று, இந்த மதத்துவேஷங்களுக்கு இடங்கொடாமல், நின்று வாதாடலாம் இச்சந்தர்பத்தில் காங்கிரஸ் தனிப் பிரதிநிதியாகிய காந்தியார் ஒரே நிலையில் நின்றிருக்கலாம். அதாவது, மதங்கள் யாவும் கற்பனைகளென்று உதறித் தள்ளிவிட்டு, காங்கிரஸ் சுயராஜ்யத்தில் சாதி மத ஆகம பழக்க வழக்கங்களை அங்கீகரிக்க மாட்டோம். இக வாழ்வுக்குரிய ஜாதி மத மற்ற வாழ்வைத்தான் கடைப்பிடித் தொழுகுவோமென கர்ஜித்திருப்பாரேயாகில், ஜயம்பெறினும், தோல்விபெறினும், உலகம் போற்றப்பெறும் சுயராஜ்யத்தை உலகிற்கு பறைசாற்றி இருக்கலாம். ஆனால், அவரும் கடவுள் பித்தக்

தில் அகப்பட்டவராதலால், இரண்டு பேருடைய மதத்துவேஷ நடுவில் போக ஆரம்பித்தார். இரு தாரத்தாருக்கும் தனது பழக்க சமாதானத்தை போதித்தார். யாரும் இவரைக் கேட்கவில்லை. கடவுளருளால் தான் தோல்வியுற்றேன் என்று கூறி, இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார்! மகம்மதியர் தங்கள் சுயராஜ்ய மொன்றை ஸ்தாபிக்க கிளம்பினார்கள் போலும்! இந்துக்களும் தங்கள் சுயராஜ்யத்தை ஸ்தாபிக்க திரும்பினார்கள் போலும்!

---

## இந்து மகம்மதிய பிரச்சினைகளின் பயன்.

ஆனால், முடிவு ஒன்று தான் ஏற்படும். மகம்மதியர்களுக்கு சில உத்தியோகங்களும் சட்ட சபைகளில் சில மகம்மதிய அங்கத்தினர்களுக்கு தற்காப்பும் பெறுவார்கள். தங்கள் பக்கம் இந்துக்களும் சிற்சில பாதுகாப்புகளையும், தற்காப்புகளையும் பெறுவார்கள். இது தான் இவர்கள் அடையப்போகின்ற பலன். நடுவில், பாமர மக்கள் தத்தம் மதத் தலைவர்கள் போனபடி, அல்ப, சொல்ப, விஷயங்களுக்கெல்லாம், மதத்துவேஷத்தையும் ஜாதித் துவேஷத்தையும் காட்டிக் கொண்டு, அவதிப்பட்டு கடைசி காலம் வரை பசியும் பட்டினியுமாய் இருந்து, கிடந்து உழல வேண்டியதே. இந்த கதியைவிட என்ன சுதந்திரம், சகோதரத்துவம் சமத்துவம், நமது 30 கோடி தோழர்களுக்கு கிடைக்கப் போகின்றது? சம தர்மத்திலாகிலும் (**Socialism**) கிடைக்குமா?

சமதர்மம்.—சுயராஜ்யம், மிதவாதம், ஜஸ்டிஸ், இந்து மகம்மதிய பிரசினைகளில், 30 கோடி மக்களுக்கு வொன்றும் கிடைக்கப் போவதில்லை என்றால், இனி என்ன வழி இருக்கின்றது. நமது சந்ததியாராகிலும், கவலையின்றி, உண்டு உடுத்தி வாழ்க வேண்டுமானால், அதனை எந்த வாழ்வில்தான் பெற முடியும்?



## ஜனநாயக கட்சி.

உலகிலுள்ள அரசியல் திட்டங்கள் யாவும், முதலாளி திட்டமாக இருக்கக் கண்டோம். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சி திட்டமும், அதில் அடங்கியதே. அந்த திட்டத்தின் இயல்பு என்னவென்றால், அரசு புரிகின்றவர்கள், என்ன நல்லெண்ணத்துடன் அரசு புரிந்து வந்தாலும், பாமர ஜனங்களுக்கு பொருளாதார சுதந்திரத்தைப் பெற இடங் கொடுப்பதில்லை. இந்த அரசியலில், டெமாக்கிரஸி (**Democracy**) என்ற ஜனநாயக ஆட்சி என்று பெயர் மாத்திரம் வழங்குவதன்றி, பொது ஜனங்கள் அரசு புரிவதில்லை. வாஸ்தவத்தில் யார் அரசு புரிந்துவருகின்றார்களென்றால், ஜனங்களுடைய பிரதிநிதிகளென்று சொல்லிக்கொண்டு, அரசியல் அதிகாரத்தை வகிக்க பொது ஜனங்களின் அனுமதியும் பெற்றுக்கொண்டு, அவர்கள் வகுப்பாரே எல்லா சம்பத்தையும், செல்வங்களையும், செல்வாக்கையும் அனுபவிப்பார்கள். நமது இந்திய தேசம் ஆங்கில தேசத்தைப்போல் சட்டசபைகளைவைத்து ஆளப்படுகிறது. நமது சட்ட சபைகளிற் சென்று யார் அரசு புரிகின்றார்கள் பார்ப்போம்? முக்கியமாக லாயர்மார், நமது சட்ட சபைகளில் அங்கத்தினர்களாக இருந்து எல்லா அரசியல் விதி விலக்குகள் (**Laws and Regulations**) ஏற்படுத்துகின்றார்கள். இவர்கள் வழக்குகளை பீஸ் (**Fees**) இல்லாமல் பேசுவார்களா? முடியாது. சொத்துக்களை, பொது உடைமையாக்குவார்களா? முடியாது. பெண்களுக்கு, பிதுரார்ஜித சொத்தில், சம பாகம் கொடுக்க விதிகளை உண்டுபண்ணுவார்களா? முடியாது. உலகில் இருப்பவர்களில், லாயர்கள்தான் அதிக பிற்போக்குடையவர்களென பெயரெடுத்து இருக்கின்றார்கள். இவர்களையே, ஜனங்கள் வருஷா வருஷம் சட்ட திட்டங்களைச் செய்ய அனுப்புகிறார்கள்.

இரண்டாவது, நிலச் சுவான்களாகிய சமீன்தார்கள், சுரோத்திரியம் தார்கள் சட்டசபைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். இவர்களை நிலத்தை, நிலமில்லாதாருக்கு கொடுக்க திட்டம் ஏற்படுத்துங்கள் என்றால், செய்வார்களா? உங்கள் நிலத்தில் உழுது விதைத்து கலம் கலமாக மாசூலை கொண்டுவரும் பண்ணை ஆட்களுக்கு இரட்டைகூலி கொடென்றால், அல்லது திட்டமொன்றைச் செய் என்றால், செய்வார்களா? அல்லது அவர்களுக்கு சுகாதார வீடுகளை கட்டிச்கொடுக்க சட்டம் செய் என்றால், செய்வார்களா?

மேல் இரண்டு தரத்தாரோடு, வீடு சொந்தக்காரர்கள், மில் சொந்தக்காரர்கள், சுரங்க சொந்தக்காரர்கள், ரயில் சொந்தக்காரர்கள், வர்த்தகர்கள, பாங்கர்கள் நமது பிரதிநிதிகளாக அனுப்ப ஏற்படுகின்றார்கள். அவர்களை தங்கள் மில்லில், ரயிலில், சுரங்கங்களில், காபி, தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், கூலிகளுக்கும், உயர்தர சம்பளம், பிரசவ வுதவி, வீடு வசதி முதலிய நாகரீக வாழ்வுக்கு வேணடிவைகளை அழைத்துக் கொடுக்கும்படி, லா (**Laws**) செய்ய வேண்டு மென்றால், அன்புடன் செய்வார்களா?

இந்நான்கு ஐந்து வகுப்புககாரர்கள் மத விஷயங்களில் மிக்க பற்றுடையவர்கள். இவர்களை, பாமர ஜனங்கள் பகுத்தறிவை உபயோகிக்க வேண்டி, சாதி மதங்களை சமூக வாழ்க்கைகளிலிருந்து எடுத்து விட ஞாயம் செய் என்றால், இவர்கள் செய்வார்களா? இது போலவே, மற்ற விஷயங்களில் பாத்தியமுள்ள பிரதிநிதிகளை, அவர்கள் பற்றுக்கு (**Interests**) விரோதமாக நடக்க வேண்டு மென்றால், அம்மாதிரி நடப்பார்களா? ஆதலால், இந்த முதலாளி திட்டத்தில் பாமரஜனங்களுடைய வாழ்வை உயர்த்தும் வசதிகள்



நமது பிரதிநிதிகள் மூலமாய் பெறமுடியாது. அதனால் தான் உலகமெங்கும் பாமர ஜனங்களாகிய தொழிலாளரும் குடிகளும், அண்ணடம் பசியை திருப்தி செய்ய பகீரத பிரயத்தனம் செயய வேண்டி வருகிறது. ஆதலால், இந்த திட்டம் மாறினால் ஒழிய, தொழிலாளிக்கும், கிருஷிகருக்கும், உலகிற்கும் சுகமில்லை. ஆதலால் தான் இந்த திட்டத்தை அனுசரித்திருக்கும் காங்கிரஸ் சுயராஜ்யமும, மிதவாதிகளுடைய சீர்திருத்தங்களும் (**Reforms**) ஜஸ்டிஸ் உத்தியோகப் பதவிகளும், பாமர மக்களுக்கு பயன்படா தெனக் கூறிவந்தோம்.

---

## சுயராஜயம் யாருக்கு.

ஆதலின், சுயராஜ்யம், யாருக்கு? என்ற வினாவிற்கு, என்ன விடை யெனில், பொருளாளிகள், தனவந்தர்கள், செல்வாக்கு பெற்றவர்கள் அதிகார வர்கத்தினர் ஆதிக்க முடையவர்கள் என்று வழங்கிவரும் பூர்ஷுவா (**Bourgeos**)க்களுக்கு காங்கிரஸ் சுயராஜ்யம் வேண்டுமே வொழிய, நெற்றியில் நீர்வடிய, நிலத்திலும், நீரிலும், குளங்களிலும், ஏரிகளிலும், வயல்களிலும், மடைகளிலும், சுரங்கங்களிலும், தோட்டங்களிலும், மில் களிலும், ரயில் களிலும், தண்டவாள பட்டரைகளிலும், கடலிலும், கப்பலிலும், சாக்கடையிலும், கக்கூசுகளிலும் பாடுபட்டுவரும் தொழிலாளர், கிரிஷகர் என வழங்கும் பாமர மக்களுக்கு, காங்கிரஸ் சுயராஜ்யம் யாதும் பயனில்லை என அறிக.

ஆனால், பின் யாருக்குதான் அந்த சுயராஜ்யம்? நமது லாயர்களுக்கும், ஜட்ஜகளுக்கும், மந்திரிகளுக்கும், தரும கர்த்தர்களுக்கும் மடாதிபதிகளுக்கும், நிலச் சுவான்களுக்கும், வீடு சொந்தக்காரர்களுக்கும் வர்த்தகர்களுக்கும், தொழிற்சாலை ரயில், கப்பல், ராணுவப் போலீஸ் உத்தியோகஸ்தர்

களுக்கும் கலாசாலைப் பண்டிதர்களுக்கும், (**University Professers**) பட்ட வர்த்தனர் மகுட வர்த்தனருக்கும், இவர்கள் சந்ததி யாருக்குந்தான், நமது தேசிய காங்கிரஸ் கோரும் சுயராஜ்ய மெனவும் அறிக.

222257

ஞானபண்டிதர் பிரஸ், கிருஷ்ணாம்பேட்டை